Learn Beyond

# KPR IAS Academy

Institute for IAS, IPS, IFS and TNPSC Exams

No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# ‘தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்’ நூலுக்காக ச.தமிழ்ச்செல்வனுக்கு சாகித்திய அகாதெமி விருது

நமது நிருபர்

புது தில்லி, மார்ச் 16: தமிழ் எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன் எழுதிய ‘தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்’ என்ற நூலுக்கு 2025-ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது திங்கள்கிழமை அறிவிக்கப்பட்டது.

நாட்டின் உயரிய இலக்கிய விருது சாகித்திய அகாதெமி விருது ஆகும். ஒவ்வோர் ஆண்டும் இலக்கிய படைப்பாளிகளுக்கு மத்திய அரசால் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. இதில் பரிசுத் தொகையாக ரூ.1 லட்சமும், பட்டயமும் வழங்கப்படுகிறது. தமிழ் உள்ளிட்ட 24 மொழிகளில் சிறுகதை, நாவல், இலக்கியம், விமர்சனம் போன்ற பிரிவில் எழுத்தாளர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது.

2025-ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருதுப் பட்டியல் திங்கள்கிழமை (மார்ச் 16) வெளியிடப்பட்டது. தமிழ் மொழியில் வெளியான ‘தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்’ என்ற நூலுக்கு எழுத்தாளர் ச.தமிழ்ச் செல்வனுக்கு சாகித்திய அகாதெமி விருதை மத்திய அரசு அறிவித்துள்ளது.

சாகித்திய அகாதெமி விருது அறிவிக்கப்பட்டுள்ள ‘தமிழ்ச்சிறுகதையின் தடங்கள்’ எனும் நூல் 1913 -1970 வரையிலான தமிழ்ச் சிறுகதை உலகின் பரிமாண வளர்ச்சியை விரிவாக ஆராயும் 900 பக்கங்களுக்கு மேலான ஒரு முக்கியமான ஆவணமாகும்.

பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ள இந்நூல் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறுகதைகளின் வேர்கள், போக்குகள் மற்றும் படைப்பாளிகள் குறித்து ஆராய்கிறது.

சென்னை தலைமைச் செயலகத்தில் அவர் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியதாவது: தமிழகத்தில் மார்ச் 15-ஆம் தேதி வரை 5.69 கோடி வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 2.90 கோடி பேர் பெண்கள், 2.78 கோடி பேர் ஆண்கள், 7,656 பேர் திருநங்கையர். இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு, இது வரை 3.14 லட்சம் வாக்காளர்கள் இணைந்துள்ளனர்.

பெயர் சேர்க்க விண்ணப்பிக்

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# உற்பத்தி, மாற்றம் மற்றும் பன்முகமயமாக்கம்: இந்தியாவின் எரிசக்தி அமைப்புமுறை தகவமைப்பு

**புது தில்லி, மார்ச் 16:** இயல்பான சூழல்நிலவும்போது எரிசக்தி கட்டமைப்பில் அரிதாகவே மாற்றங்கள் மேற்கொள்ளப்படும். ஒரு நெருக்கடியின்போது மட்டுமே கட்டமைப்பு, செயல்பாடுகளில் மாற்றங்கள் நடைபெறுவது வழக்கம்.

ஆனால் கடந்த 11 ஆண்டுகளில் மத்திய அரசு இவ்வழக்கிலிருந்து மாறுபட்டு செயல்பட்டுள்ளது. சூழ்நிலைகளால் கட்டாயம் ஏற்படாத போதிலும், எரிசக்தித் துறையில் கட்டமைப்பு மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தி, புதிய எரிசக்தி ஆதாரங்களுக்கான மாற்றங்களை திறம்பட நிர்வகித்து, விநியோக ஆதாரங்களை பன்முகமயமாக்குவதன் மூலம், வெளிப்புற சவால்களால் நாட்டின் எரிசக்தி தேவைகளில் ஏற்படும் பாதிப்பை மத்திய அரசு குறைத்துள்ளது.

தங்கள் பிரச்னைகளுக்குத் தீர்வுகளை எதிர்நோக்கிய மக்களுக்கு முன், அரசு தன்னை மிகுந்த பொறுப்புணர்வுடன் நிலைநிறுத்தியுள்ளது. இந்த உத்தி மூன்று தூண்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

முதலாவது, உள்நாட்டு உற்பத்தி, பெட்ரோலுடன் எத்தனால் கலக்கும் முயற்சி.

2014-ஆம் ஆண்டுக்குப் பிறகு, பிரதமர் மோடி அரசின் தலைமையின் கீழ், எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவது மற்றும் ஊரகப் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கான தொடர் சீர்திருத்தங்களை இந்தியா தொடங்கியது.

பெட்ரோலுடன் எத்தனால் கலக்கும் திட்டத்தின் கீழ் 2014-இல் 1.5 சதவீதமாக இருந்த எத்தனால் கலவை அளவு, 2025-இல் 13 மடங்கு அதிகரித்து 20 சதவீதமாக உயர்ந்தது.

இரண்டாவது உத்தி - எரிசக்தி துறையில் நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக மின்சார மற்றும் ஹைபிரிட் வாகன தொழில்நுட்பத்தின் தகவமைப்பு மற்றும் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ஃபேம் இந்தியா திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த முன்முயற்சியின் விளைவாக 2019-20 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023-24-இல் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட மின்சார வாகனங்களின் எண்ணிக்கை 9.7 மடங்கு அதிகரித்துள்ளது.

மூன்றாவது உத்தி - மத்திய அரசின் எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் விநியோக கூட்டாளர்களின் பன்முகப்படுத்தலாகும். இதன் காரணமாக, ஒரு தசாப்தத்திற்கு முன்பு 27-ஆக இருந்த இந்தியாவின் கச்சா எண்ணெய் ஆதார தளம் இன்று 40-க்கும் அதிகமான நாடுகளாக உயர்ந்துள்ளது.

ரஷியா-உக்ரைன் போர் மற்றும் ஹோர்முஸ் நீரிணையைச் சுற்றியுள்ள பதற்றங்கள் போன்ற நிகழ்வுகள், விநியோகச் சங்கிலிகள் எவ்வளவு விரைவாக பாதிக்கப்படலாம் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளன. உள்நாட்டு மாற்று வழிகளின் விரிவாக்கம் இல்லாமல் இருந்திருந்தால், இதுபோன்ற சவால்களால் இந்தியாவிற்கு மிக மோசமான விளைவுகள் ஏற்பட்டிருக்கும்.

இன்று நிலவும் புவிசார் அரசியல் நிச்சயமற்ற காலகட்டத்திலும், எரிசக்தி தேவைகளை நிர்வகிப்பதில் வலுவான இடையகங்கள் மற்றும் அதிக நெகிழ்வுத்தன்மையுடன் இந்தியா செயல்பட கடந்த பத்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் உதவியுள்ளன.

## 98-ஆவது ஆஸ்கர் விருதுப் பட்டியல்

**சிறந்த திரைப்படம்**
ஒன் பேட்டில் ஆஃப்டர் அனதர்

**சிறந்த இயக்குநர்**
பால் தாமஸ் ஆண்டர்சன் (ஒன் பேட்டில் ஆஃப்டர் அனதர்)

**சிறந்த நடிகர்**
மைக்கேல் பி.ஜோர்டன் (சின்னர்ஸ்)

**சிறந்த நடிகை**
ஜெஸ்ஸி பக்லி (ஹாம்நெட்)

**சிறந்த குணச்சித்திர நடிகர்**
ஷான் பென் (ஒன் பேட்டில் ஆஃப்டர் அனதர்)

**சிறந்த குணச்சித்திர நடிகை**
ஏமி மேடிகன் (வெப்பன்ஸ்)

**சிறந்த ஒளிப்பதிவு**
ஆட்டம் டூரால்ட் ஆர்காபா (சின்னர்ஸ்)

**சிறந்த படத்தொகுப்பு**
ஆண்டி ஜர்கென்சன் (ஒன் பேட்டில் ஆஃப்டர் அனதர்)

**சிறந்த பின்னணி இசை**
லுட்விக் கோரன்சன் (சின்னர்ஸ்)

**சிறந்த விஷுவல் எஃபெக்ட்**
அவதார் ஃபயர் அண்ட் ஆஷ்

**சிறந்த தயாரிப்பு மற்றும் கலை வடிவமைப்பு**
தமாரா டெவெரெல், ஷேன் வியூ (ஃபிராங்கன்ஸ்டைன்)

**சிறந்த ஆடை வடிவமைப்பு**
கேட் ஹாலே (ஃபிராங்கன்ஸ்டைன்)

**சிறந்த ஒப்பனை & சிகை அலங்காரம்**
மைக் ஹில், ஜோர்டன் சாமுவேல்,
கிளியோனா ஃபுரீ (ஃபிராங்கன்ஸ்டைன்)

**சிறந்த மூல திரைக்கதை**
சின்னர்ஸ் (ரையன் கூக்லர்)

**சிறந்த தழுவல் திரைக்கதை**
ஒன் பேட்டில் ஆஃப்டர் அனதர் (பால் தாமஸ் ஆண்டர்சன்)

**சிறந்த சர்வதேச திரைப்படம்**
சென்டிமென்டல் வேல்யூ (நார்வே)

**சிறந்த ஒலித்தொகுப்பு**
காரெத் ஜான், அல் நெல்சன்,
குவென்டலின் யேட்ஸ் விட்டில், கேரி ஏ.ரிசோ,
ஜுவான் பெரால்டா (எஃப்-1)

**சிறந்த பாடல்**
கோல்டன் (கே-பாப் டெமான் ஹண்டர்ஸ்)

**சிறந்த லைவ் ஆக்ஷன் குறும்படம் (சம வெற்றி)**
தி சிங்கர்ஸ் மற்றும் டூ பீப்பிள் எக்ஸ்சேஞ்சிங் சலைவா

**சிறந்த ஆவண திரைப்படம்**
மிஸ்டர் நோபடி அகெய்ன்ஸ்ட் புதின்

**சிறந்த ஆவண குறும்படம்**
ஆல் தி எம்ப்ட்டி ரூம்ஸ்

**சிறந்த அனிமேஷன் படம்**
கே-பாப் டெமான் ஹண்டர்ஸ்

**சிறந்த அனிமேஷன் குறும்படம்**
தி கேர்ள் ஹூ க்ரைடு பேர்ல்ஸ்

**அறிமுகப் பிரிவு: சிறந்த நடிகர்கள் தேர்வு (காஸ்டிங்)**
கசாண்ட்ரா குலுகுந்திஸ் (ஒன் பேட்டில் ஆஃப்டர் அனதர்)

# இந்தியாவில் மதச் சுதந்திரம் மோசமடைந்துள்ளது

## அமெரிக்கா

**நியூயார்க், மார்ச் 16:** இந்தியாவில் மதச் சுதந்திரம் மோசமான நிலையில் இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க அரசின் சர்வதேச மத சுதந்திரத்துக்கான ஆணையம் (யுஎஸ்சிஐஆர்எஃப்) வெளியிட்டுள்ள வருடாந்திர அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

2025-ஆம் ஆண்டில் இந்தியாவில் மத சுதந்திரம் தொடர்ந்து மோசமடைந்து இருந்தது. இந்திய அரசு மத சிறுபான்மையினரையும், அவர்களின் வழிபாட்டு தலங்களையும் குறிவைத்து புதிய சட்டத்தை கொண்டு வந்து அமல்படுத்தியது. பல்வேறு மாநிலங்கள், மத மாற்றத்துக்கு எதிரான சட்டங்களை கொண்டு வந்தது. மேலும் அதை வலுப்படுத்தியது. இதில் கடுமையான தண்டனையும் அடங்கும்.

நாடு முழுவதும் அரசு அதிகாரிகள் மத அகதிகளை சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேற்றியதுடன் அவர்களை கைதும் செய்தனர். மத சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் சகித்து கொள்ளப்பட்டன.

முஸ்லிம்கள் அதிகம் வாழும் காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஹிந்து சுற்றுலா பயணிகளை குறிவைத்து லஷ்கர் பயங்கரவாதிகள் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இது இந்தியா-பாகிஸ்தான் இடையே 5 நாள் மோதலுக்கு வித்திட்டது. மேலும் இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிரான எண்ணத்தை ஏற்படுத்தியதோடு, அவர்கள் மீது தாக்குதலுக்கும் வழிவகுத்தது.

இந்தியாவில் குழுத் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. ஆதலால் இந்தியாவை குறிப்பிட்ட ஒரு தரப்பினருக்கான நாடாக வரையறுக்க வேண்டும்.

சிறுபான்மையினர் மீதான தாக்குதலுக்கு காரணமான ரா அமைப்பு (இந்திய உளவுத் துறை) மற்றும் ஆர்எஸ்எஸ் போன்ற அமைப்புகளுக்கு தடை விதிக்க வேண்டும். அவற்றுக்கு சொந்தமான சொத்துகளை முடக்குவது அல்லது அவற்றை சேர்ந்தோர் அமெரிக்காவுக்கு வர தடை விதிப்பது போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசால் ஏற்படுத்தப்பட்ட யுஎஸ்சிஐஆர்எஃப் அமைப்பு, சுதந்திரமாக செயல்படக்கூடியது. அந்த அமைப்பு, உலக நாடுகளில் மத நிலவரங்கள் குறித்து ஆய்வு செய்து, அதுதொடர்பான கொள்கையை வகுக்க அமெரிக்க அதிபர், வெளியுறவுத் துறை அமைச்சர், அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு பரிந்துரைகள் அளிக்கும்.

**இந்தியா மறுப்பு:** யுஎஸ்சிஐஆர்எஃப் குற்றச்சாட்டுக்கு இந்திய வெளியுறவு அமைச்சகம் மறுப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் கூறுகையில், 'யுஎஸ்சிஐஆர்எஃப் அண்மையில் வெளியிட்ட அறிக்கையை இந்தியா கவனத்தில்கொண்டது. அதில் கூறப்பட்டுள்ள தகவல்கள் ஒருதரப்பினருக்கானது. அரசியல் உள்நோக்கம் கொண்டது.

கடந்த சில ஆண்டுகளாக இந்தியா குறித்து உண்மைக்குப் புறம்பான தகவல்களை யுஎஸ்சிஐஆர்எஃப் வெளியிட்டு வருகிறது. இது அந்த ஆணையத்தின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்குகிறது.

இந்தியாவை விமர்சிக்கும் முன் அமெரிக்காவில் உள்ள ஹிந்து கோயில்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் மீது நடத்தப்படும் தாக்குதல் சம்பவங்களைக் குறைப்பதற்கு யுஎஸ்சிஐஆர்எஃப் முக்கியத்துவம் அளிக்கலாம். அந்த ஆணையம் சுமத்திய குற்றச்சாட்டுகளை இந்தியா முற்றிலும் நிராகரிக்கிறது' என்றார்.

# அமெரிக்காவுடன் இந்தியா பேச்சு நடத்தவில்லை

## வெளியுறவு அமைச்சகம்

**புது தில்லி, மார்ச் 16:** ஹோர்முஸ் நீரிணை விவகாரம் தொடர்பாக அமெரிக்காவுடன் இந்தியா பேச்சு நடத்தவில்லை என்று வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

பாரசீக வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடாவுக்கு இடையே உள்ள ஹோர்மூஸ் நீரிணைப் பாதை வழியாக உலக அளவில் சுமார் 20 சதவீத கச்சா எண்ணெய், திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி) கொண்டு வரப்படுகின்றன. அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடனான போரால், அந்தப் பாதையை ஈரான் மூடியது. இதனால் கச்சா எண்ணெய் மற்றும் எல்என்ஜி கிடைப்பதில் இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளது.



ரண்தீர் ஜெய்ஸ்வால்

இதையடுத்து அமெரிக்க அதிபர் டிரம்ப் ட்ரூத் சோஷியல் சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில், 'ஹோர்முஸ் நீரிணைப் பாதை மூடப்பட்டதால் சீனா, பிரான்ஸ், ஜப்பான், தென் கொரியா, பிரிட்டன் மற்றும் பிற நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஹோர்முஸ் நீரிணையைப் பாதுகாப்பாகவும், மூடாமல் திறந்து வைக்கவும் அங்கு அந்த நாடுகள் போர்க் கப்பல்களை அனுப்பும்' என்று நம்புவதாக தெரிவித்தார்.

இந்நிலையில், புது தில்லியில் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் திங்கள்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது ஹோர்முஸ் நீரிணைக்கு போர்க் கப்பலை அனுப்ப வேண்டும் என்று இந்தியாவிடம் அமெரிக்கா கோரியதா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், 'ஹோர்முஸ் நீரிணை விவகாரம் குறித்து பல நாடுகள் விவாதித்து வருவது இந்தியாவுக்கு தெரியும். ஆனால் அந்த விவகாரம் குறித்து அமெரிக்காவுடன் இந்தியா பேசவில்லை. இதுகுறித்து சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பிடமும் இந்தியா கலந்தாலோசிக்கும்' என்றார்.